Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4·50

ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் நாளிதழ்

நாதம்: 02 மார்ச் (21 - 03 - 1991) வியாழக்கிழமை ஓசை: 31

## மரணச்சடங்கு செலவுபெற மீண்டும் சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

1990ஆம் ஆண்டு ஜூன் மாத இராணுவ நடவடிக்கையில் உயிரிழந்தும் மூன்று மாதங்களுக்குப் பிந்தியதால் மரணச் சடங்குச் செலவான 2000 ரூபாவை பெறத்தவறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களது விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு மீண்டும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதாக செயலக புனர்வாழ்வு பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை மேற்படி நிவாரணத்தைப் பெறாக் கொள்ளாதவர்கள் இனா (4ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாவட்ட சிலாவத்துறை, கொக்குப்படையான்;

# இரு ராணுவ முகாம்கள் மீது

# ஒரே நேரத்தில் தாக்குதல்

## இரண்டாவது நாளாகச் சண்டை தொடர்கிறது

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் இரண்டுமைல் இடைத்தூரத்தில் அமைந்துள்ள இரண்டு சிறிலங்கா இராணுவமுகாம்கள்மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகளால் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இத்தாக்குதல் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தொடர்ந்து நடைபெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னார் மாவட்டத்தில் உள்ள சிலாவத்துறை மற்றும் கொக்குப்படையான் முகாம்களே புலிகளின் பலத்த தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கும் முகாம்களாகும்.

இவ் இரு முகாம்களின் மீது பசிலன் தாக்குதல்களும், சிறுரக பீரங்கித் தாக்குதலும், துப்பாக்கித் தாக்குதலும் புலிகளால் மேற்கொள்ளப்படுவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. புலிகளின் தாக்குதலுக்கு எதிராக விமானப்படை விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

மேலும் புலிகளின் ஆரம்பத் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் நாற்பத்தியொரு இரா (4ஆம் பக்கம் பார்க்க)

### 'ஓ' பிரிவு உடன் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கிக்கு உடனடியாக 'ஓ' பிரிவு இரத்தம் தேவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓ பிரிவு இரத்தம் உடையவராக இருந்தாலும் தம்முடன் தொடர்பு கொள்ளும் (4ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா கடற்படையால் 43 தமிழர் கடலில் கைது

(மன்னார்)

ளைப்பாடு கடலில் படகொன்றில் பயணம் செய்த பெண்கள், குழந்தைகள் உட்பட 43 அப்பாவித் தமிழ் மக்கள் கடற்படையினரின் பிடியில் சிக்கியுள்ளனர்.

ளைப்பாட்டில் இருந்து இரணைதீவை நோக்கி இவர்கள் சென்றுகொண்டிருந்தபோது கடலில் துப்பாக்கிச் சத்தங்கள் தொடர்ச்சியாக கேட்டதாகவும் இவர்கள் கடற்படையிடம் சிக்கிக்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களை படையினர் கைது செய்து முகாமிற்கு கொண்டு (4ஆம் பக்கம் பார்க்க)

### ஷெல் தாக்குதல்

(ஆனையிறவு)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து இயக்கச்சிப்பகுதியை நோக்கி ஷெல் மற்றும் கலிபர் தாக் (4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பூர்வீக நிலப்பரப்பை சிறிலங்கா ஆக்கிரமித்துள்ளது

- வன்னிப் பிராந்தியப் பொறுப்பாளர் மனோ

''வட தமிழ் ஈழ முல்லைத்தீவு, வவுனியா மாவட்டத்தில் தமிழர்களின் பூர்வீக நிலப்பரப்பை சிறிலங்கா சிங்கள அரசு ஆக்கிரமித்திருக்கிறது. இப்பகுதியில் பொருளாதார இலக்குகளும் கூடுதலாக உண்டு. கால்நடை, விவசாயம், காட்டுவளம், கடற்றொழில் மற்றும் தமிழரின் தொல் பெருஞ் சான்றுகள் உள்ள இடங்களை அழிப்பது சிறிலங்கா அரசாங்கத்தின் நோக்கமாகும்.''-இவ்வாறு வன்னிப் பிராந்தியஅரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் து. மனோ தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

ஆறுமாத யுத்த காலத்தில் சிறிலங்கா அரசபடைகளுக்குப் பலத்த அடிகொடுத்துப் பல இடங்களில் விரட்டியுள்ளோம். இதனால் திகைப்புற்ற சிறிலங்கா அரசு வான் தாக்குதல் மூலம் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. பள்ளிக் (3ஆம் பக்கம் பார்க்க)



## வெளிமாவட்ட மாணவரும் பரீட்சையில் தோற்றமுடியும்

வெளிமாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்து வந்துள்ள ஐந்தாம் ஆண்டு மாணவர்கள் இம்மாதம் நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றமுடியும் என யாழ். கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடைய மாணவர்கள் தமது தற்போதைய பாடசாலை அதிபர்களினூடாக சுயவிபரங்களையும் கொத்தணி அதிபர்களிடம் இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறும் அவர் மேலும் தெரிவித்தார்' (மு)

### இடம் பெயர்ந்த மாணவர்கள் பரீட்சை நிலையங்களை தெரியப்படுத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமது பாடசாலைகளினூடாக 1990 ஆம் ஆண்டிற்குரிய புலமைப்பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பித்து தற்போது இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களைச் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் இனங்கண்டு அவர்களுக்குரிய புதிய பரீட்சை நிலையங்களைத் தெரியப்படுத்துமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

அத்துடன் அவர்களுக்கான (4ஆம் பக்கம் பார்க்க)

## நாளைய வெள்ளி மஞ்சரியில்!

நாளை வெளிவரவிருக்கும் வெள்ளி மஞ்சரியில விழுதுகள்-போராளி லெப்டினன்ட்கேணல் ஜொனி பற்றிய சில நினைவுக்குறிப்புகள், தேசமேவிழித்திருக்கிறது-''மறைகின்ற சூரியன் இரத்தம் சிந்துவதால்தான் மறுநாளும் வாழ்கின்றது.'' கவிஞர் இரும்பொறையின்கவிதைத் தொகுப்பின் அறிமுகம்'' ''இரட்டை நாக்கு'' என. கிருஷ்ணசிங்கத்தின் சிறுகதை, தீ மு.க அரசு கலைப்பு திரைமறைவுச் சங்கதிகள் ''மதன்'' தரும் தகவல்கள் வாரசாரம் · ஜெயா எழுதும் செய்தி விமர்சனக் கட்டுரை உட்பட பல்வேறு விடயங்களைத் தாங்கி வருகின்றது.

விலை ரூபா 5 / 50 சதம்.

## மன்னார் ஆயர் வவுனியாவில் ராணுவத்தால் தாக்கப்பட்டார்

(வவுனியா)

மன்னார் ஆயர் அதி. வண. ரொம் சௌந்தரநாயகம் வவுனியாவில் இராணுவத்தினரால் தாக்கப்பட்டார். பாங்கொக்கில மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு கொழும்பு திரும்பியிருந்த மன்னார் ஆயர் மடுக்கோவில் அகதிகள் முகாம் பற்றிய பிரச்சினைகள் தொடர்பாகப் பேச வவுனியா இராணுவத் தளபதி டென்சில் கொப்பேகடுவாவிடம் முன் கூட்டியே ஏற்பாடு செய்திருந்தார். இதன் பிரகாரம் கடந்த சனியன்று பிற்பகல் 2 30 மணியளவில் வவுனியா பிரதான முகாமை நோக்கிச் சென்ற ஆயரின் கார் வவுனியாவில் சர்வோதயத்துக்கு அருகில் இராணுவத் தடை முகாமுக்கு முன்னால் மறிக்கப்பட்டது. தவக் காலத்துக்காக வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்திருந்த மூன்று (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.வைத்தியசாலையில் பரபரப்பான பிரசவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனையில் நேற்று நடைபெற்ற அசாதாரண பிரசவ நிகழ்ச்சி ஒன்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நா. பெனடிக்ரா (வயது 28) என்பவர் குழந்தை ஒன்றைப் பிரசவித்ததைத் தொடர்ந்தே இந்தப் பரபரப்பு ஏற்பட்டது.

புங்குடுதீவைச் சேர்ந்த மேற்படி நபர் உடலியல் ரீதியாக ஆண், பெண் ஆகிய இருபாலுக்குமுரிய உறுப்புக்களைக் கொண்டவராயினும் பெண்பாலுக்குரிய உயிரியல் இயல்புகளை ஒப்பீட்டளவில் அதிக (4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தேவை

பாவித்த 'சம்போ, ஒடிக்க லோன், Gum (கம்), Vicks போத்தல். பவுடர் டப்பா போல் பொயின்ட் பேனா, சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும்: எஸ் சத்தியன், 55, மணிக்கூட்டு வீதி, கொழும்பு ஸ்ருடியோ பின்புறம், யாழ்ப்பாணம்;

(B. 2169)

### விற்பனைக்கு

பலசரக்குக் கடைக்குத் தேவையான சகல தளபாடங்களும் உடனே விற்பனைக்குண்டு. தொடர்பு சொல்கபுடிரோன் பிறுறாடோ, சோதி வேம்படி ஒழுங்கை, திகைர் வளவு, மானிப்பாய்.

(R - 1196)


# அப்பி. கொப்பி கொண்டு வர கல்விப்பணிப்பாளர் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இரண்டு லட்சம் அப்பியாசக் கொப்பிகளை கப்பல்மூலம்கொண்டு வர இருப்பதாக யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் இராசு சுந்தரலிங்கம் தெரிவித்தார்:

இந்த அப்பியாசக் கொப்பி கள் கொள்விலையுடன்போக்கு வரத்து செலவுக் கூட்டப்பட்டு இலாபம் எதுவும் இல்லாது மாணவர்களுக்குவிற்பனைக்கு விடப்படும் எனவும் அவர் கூறினார்; (லோ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திரு. க. கணபதிப்பிள்ளை

இணைத்தடிச்சின்னத்தம்பி)

தோற்றம் 2 - 10 - 1934 மறைவு 18 - 9 - 1990

திதி 21 - 3 - 1991

அன்பின் உறைவிடமாய். பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எங்களையெல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர்,
இராமநாதபுரம், உற்றார், உறவினர், நண்பர்கள்.
கிளிநொச்சி;

(R - 1192)

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க பொதுக்கூட்டம்

யாழ் மாவட்டத்திலுள்ள சகல பேக்கரி உரிமையாளர்களும் இன்று 21-3 1991 மாலை 4-30 மணிக்கு யாழ் பரியோவான் கல்லூரியில் நடைபெறும் (St. Johns College) பொதுக் கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்குப்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இதனை முக்கிய அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இப்படிக்கு
காரியதரிசி

(R/ 1139)

## IESL – JAFFNA CENTRE
ANNUAL GENERAL MEETING

### INVITATION

TO FELLOWS AND MEMBERS

The Forth Annual General Meeting of the IESL Jaffna Centre will be Held on Saturday 23rd March 1991 at 9.00 am, at Selvanayagam Block University of Jaffna, Thirunelvely, Please be present.

R SHANMUGARATNAM
SECRETARY CUM TREASURER

(R- 1191)

## COMPUTER PROGRAMMING COURSES

| | | |
|---|---|---|
| BASIC | | |
| Day Batch | - | 19-03-1991 |
| Weekend Batch | - | 30-03-1991 |
| PASCAL | - | 30-03-1991 |
| LOTUS 1, 2, 3 | - | 22-03-1991 |
| d BASE III+ | - | 21-03-1991 |

Lectures by the members of the
Institute of Data Processing Management

### School of Business Administration

(Leaders in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA;

(B.2166)



## நினைவு கூருகின்றோம்

### மார்ச் 21

1986 ஆம் ஆண்டு ஈச்சிலம்பத்தையில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின் போது வீரமரணமடைந்த

**ஜெகன்** (இராசையா துரைசிங்கம்- தம்பலகாமம்)

1987 ஆம் ஆண்டு வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றி வளைப்பின் போது வீரமரணமடைந்த

**பெரியராஜன்** (ராஜன்-ஓமந்தை)

இதே ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வீரமரணமடைந்த

✻ **சாந்தன்** (இ; சாந்தகுமார்-பருத்தித்துறை)

✻ **சின்னப்பரா** (பரராசசிங்கம்-வட்டக்கச்சி)

1989 ஆம் ஆண்டு ஏழாலையில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின்போது வீரமரணமடைந்த

மல்லாகப் பிரதேசப் பொறுப்பாளர்

**லெப். சிறைவாசன்** (தவமணிநாயகம் முரளிகிருஷ்ணா -மல்லாகம்)

**நாயுடு**

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

✻ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

– விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2151)

## AIRCONDITION AND REFRIGERATION

(குளிரூட்டலும் பாதுகாத்தலும்)

### புதிய பயிற்சி நெறிக்கான வகுப்புக்கள்

ஆரம்பம் 23 Mar 1991

- பிரபல விரிவுரையாளர்
- வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குத் தகுந்த ஆங்கில விளக்கங்கள்
- இலகு செய்முறைப் பயிற்சி

விபரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St PETER'S LANE,
HOSPITAL ROAD,
JAFFNA.

(B/ 2170)

## குறைந்த விலை ✻ நிறைந்த தரம் ✻ சிறந்த சேவை

- மின்சாரப் பொருள்கள்
- அழகுசாதனப் பொருள்கள்
- புடைவை வகைகள்
- எவர்சில்வர், அலுமினியப் பாத்திரங்கள்
- சிறுவர் சிறுமியர் விளையாட்டுப் பொருள்கள்
- பாடசாலை, அலுவலக உபகரணங்கள்
- கண்ணாடிப் பாத்திரங்கள், பிளாஸ்ரிக் வகைகள்

இன்னும் உங்களுக்குத் தேவையான சகல பொருள்களையும் ஒரே இடத்தில் வசதியாகப் பெற்றுக்கொள்ள

### எழிலகம்

மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் சந்திக்கருகாமையில்)
யாழ்ப்பாணம்.

குறிப்பு / எமது ஸ்தாபனம் வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9-00 மணிமுதல் மாலை 5-00 மணி வரை வாடிக்கையாளர்களுக்காகத் திறந்திருக்கும்.

(B/2117)

## ✻ சிந்தனைக்கு ✻

நாகரிகம் என்ற வழக்கமான இடைவெளியைக் கடக்காமல் காட்டுமிராண்டித் தனத்திலிருந்து சீரழிவுக்கு நேராகச் செல்லும் அற்புதத்தை உலக வரலாற்றில் சாதித்துள்ள ஒரே நாடு அமெரிக்கா தான்.

—ஜார்ஜ் கிளேமான்ஸோ

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 21-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# உலகம் முழுவதும் அமெரிக்காவிற்காகவே

வளைகுடாவில் ஏற்பட்ட போரைத் தொடர்ந்து வல்லரசுகள் அல்லாத நாடுகளின் உள்ள இரசாயன ஆயுதங்களையும், அணு ஆயுதங்களையும் ஒழித்துக்கட்டி விட வேண்டும் என அமெரிக்கா தீவிரமாகச் செயற்படத் தொடங்கியுள்ளது.

இதன்படி ஈராக்குடன் நிரந்தரப் போர்நிறுத்தம் செய்ய வேண்டுமானால், ஈராக்கிடம் உள்ள இரசாயன ஆயுதங்கள் ஒழிக்கப்பட வேண்டும், பாகிஸ்தானுக்கு பொருளாதார உதவி வழங்க வேண்டுமானால் பாகிஸ்தானிடம் உள்ள அணு ஆயுதங்களையும் இரசாயன ஆயுதங்களையும் பார்வையிட வேண்டும். அதேபோன்று வடகொரியா அணு உற்பத்தி நிலைகளைப் பார்வையிட வேண்டும் போன்ற மிரட்டல்களையும், கோரிக்கைகளையும் அமெரிக்கா விட்டுள்ளது.

அமெரிக்காவின் இப்போக்கு ஒரு விநோதமான நடவடிக்கையாகும். அமெரிக்காவும் - சோவியத் யூனியனுக்குமிடையில் ஆயுதப் பரிகரண ஒப்பந்தங்கள் பல ஏற்பட்டுள்ள போதிலும் அவை எவற்றிலும் எந்தவித ஆயுதங்களும் பூரணமாக ஒழிக்கப்படுவதற்கான ஒப்பந்தம் எவையும் ஏற்படவில்லை. இரசாயன ஆயுதங்களில்கூட 5000 தொன் எடையுள்ள ஆயுதங்கள் வைத்துக்கொண்டே மீதி ஒழிப்பதற்கான ஒப்பந்தங்கள் ஏற்பட்டன.

இந்நிலையில் மூன்றாம் உலக நாடுகளின் அணு, இரசாயன ஆயுத உற்பத்திகளைத் தடை செய்யவும், அழித்தொழிப்பதற்கும் அமெரிக்காவிற்கோ அல்லது வல்லரசுகளுக்கோ என்ன தார்மீக பலம் உண்டு?

மூன்றாம் உலக நாடுகளின் ஆயுதப் போட்டிக்கும், அணு, இரசாயன ஆயுத உற்பத்திக்கும் வல்லரசுகளே காரணமாகும், தமது ஆதிக்கத்தைப் பரவச் செய்யவும், அதிகாரத்தை நிலைநாட்டவும் மூன்றாம் உலக நாடுகளுக்கு இடையில் மோதலைத் தோற்றுவிப்பவர்களும் உள்நாட்டு போர்களை உருவாக்கி வைப்பவர்களும் இவர்களே. இவற்றின் காரணமாக பெருமளவு ஆயுதங்களை விற்பனை செய்து பொருளாதார நன்மை அடைகின்றார், அந்நாடுகளின் அரசியலிலும் செல்வாக்குச் செலுத்தினார்கள்.

இன்று பாகிஸ்தான் அணு ஆயுதங்கள், இரசாயன ஆயுதங்கள் உற்பத்தி செய்வதை நிறுத்தினால்தான் உதவிகள் - பொருளாதார - இராணுவ - வழங்கப்படும் என அமெரிக்கா தெரிவிக்கின்றது. ஆனால் பாகிஸ்தான் இந்த உற்பத்திகளில் ஈடுபட ஊக்கம் கொடுத்தது யார்? ஆயுதத் தொழில் நுட்பத்தின் நுட்பத்தை எங்கிருந்து பெற்றது? சூழவுள்ள நாடுகளுடன் - இந்தியா, ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தானை மோதவிட்டது யார்? பாகிஸ்தானுக்கு அணு, இரசாயன ஆயுத உற்பத்திகளுக்கு நிதியும், தொழில்நுட்ப உதவிகளும் கொடுத்தவை எந்த நாட்டுக் கொம்பனிகள்? பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கிய பொருளாதார உதவியை விட இராணுவ உதவி அதிகமாக இருந்தது ஏன்?

இதேபோன்று ஈராக்கிற்கு இரசாயன ஆயுதங்களுக்குரிய தொழில்நுட்பத்தையும் உபகரணங்களையும் விற்பனை செய்தது யார்? குவைத் ஈராக் ஆக்கிரமிப்பதற்கு முதல் நாள் அமெரிக்கா ஈராக்கிற்கு சுமார் 7 லட்சம் டொலர் பெறுமதியான நவீன உபகரணங்களை விற்றது. இதேபோன்று 1988-1990 க்கும் இடையில் 771 நவீன உபகரணங்களை அமெரிக்கா ஈராக்கிற்கு விற்றது. இவை இரசாயன ஆயுத உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டன என போரின்போது குண்டு வீசி அழிக்கப்பட்டன. அதேபோன்று ஈராக் யுத்தத்தின்போது தனியாக சோவியத் இராணுவத் தளபாடங்களைப் பாவிக்கவில்லை. பிரான்ஸ், ஜேர்மனி போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தளபாடங்களையும், கருவிகளையும் பாவித்தன. இந்த நிலையில் ஈராக்கின் ஆயுத வளர்ச்சியில் நன்மை அடைந்தவர்கள் யார்?

மூன்றாம் உலக நாடுகளில் உள்ள அணு ஆயுதமாக இருந்தாலென்ன ஒரு நவீன துப்பாக்கியாக இருந்தாலென்ன யாவும் வல்லரசுகளினால் உற்பத்தி செய்யப்பட்டவையே. மூன்றாம் உலகின் செல்வத்தை உறிஞ்சுவதற்காக ஆயுதங்களை விற்பனை செய்யும் வல்லரசுகள், அந்நாடுகள் பலம் பெறுவதையும், தமது நலனைப் பாதிப்பதையும் அவர்கள் விரும்பவில்லை. இதனால் அந்நாடுகளையும் ஆயுதங்களையும் அழித்து ஒழிக்க விரும்புகின்றன.

உலகமே மேற்குலகத்திற்காக குறிப்பாக அமெரிக்காவிற்கும், பிரிட்டனுக்காகவும் உள்ளது என்பதே அந்நாட்டு ஆட்சியாளர்களின் கருத்தாகும். இக்கருத்தை அவர்கள் மனங்களில இருந்து அகற்றப்படும் வரை மூன்றாம் உலகம் சுதந்திரமும், சுபீட்சமும் பெறமுடியாது என்பதே உண்மை.

# கூட்டுக் கலாசாரம் மறைந்து தமிழர் கலாசாரம் வளர வேண்டும்!

புதுவை இரத்தினதுரை

(புங்குடுதீவு)

''எம் மண்ணில் இருந்து முற்றாக எதிரியை விரட்டி அடிக்க வேண்டும். சுதந்திரமாக நாம் வாழ வேண்டும். எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்து விட்டதான ஒரு நிலைமை உருவாகும்போது எம் மண்ணில் சாதி மத பேதம், சீதனக் கொடுமை என்பன முற்றாக மறைய வேண்டும். இன்று தமிழீழ மண்ணில் நிலவும் 'கூட்டுக் கலாசாரம்' முற்றாக மறைந்து எமது கலை கலாசாரம் அழியாது பாதுகாக்கப்பட வேண்டும். இத்தகைய நோக்கங்களுக்காகவும், எதிரிக்கு ஓர் தலைக்குனிவை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவுமே தமிழீழப் பிரதேசம் எங்கும் அடுத்த மாதம் ஆறாம் திகதி முதல் பதினைந்தாம் திகதி வரை மாபெரும் முத்தமிழ் விழா கொண்டாடப்படவுள்ளது'' இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள் பதினெட்டாம் திகதி வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் தீவக கூட்டுறவாளர்கள், சிற்றூரவை உறுப்பினர்கள் கலந்து கொண்ட முத்தமிழ் விழா பற்றிய கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தீவக அரசியற் பொறுப்பாளர் திரு சுதா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் புதுவை இரத்தினதுரை அவர்கள் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்... ''எதிரிக்கு உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்த எடுக்கப்படும் இவ்விழாவில் மக்கள் அனைவரும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் கலாசார பண்பாட்டு எழுச்சியை ஏற்படுத்தி புரட்சியை உருவாக்க வேண்டும். இதை ஒரு களியாட்ட விழாவாக அல்லாமல் போராட்டத்திற்கு உரமூட்டக்கூடியதாக நடாத்துவதன் மூலம் பழைய சங்ககாலம் ஒன்றில் நுழையப் போகிறீர்கள் எனவே விக்கினங்கள் இன்றி இந்த விழா சிறப்பாக நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்க மூத்த உறுப்பினர் திரு: தேவர், மகளிர் படைப் பிரிவின் தீவக அரசியற் பொறுப்பாளர் செல்வி அன்பரசி, ஆகியோருடன் கலை கலாசார பிரிவின் யாழ் மாவட்ட, தீவகப் பொறுப்பாளர்கள், மற்றும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்களும் மேற்படி கருத்தரங்கில் சமுகமளித்திருந்தனர். (22)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடங்கள், கோயில்கள், பொது நிறுவனங்கள், பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீது வான் தாக்குதலை மேற்கொண்டுள்ளது. இதன் நோக்கம், பொருளாதாரத்தை முற்றாக அழிப்பதுடன், மக்களை விடுதலைப் போராட்டத்திலிருந்து தனிமைப்படுத்துவதுதான். தனது வலுவற்ற அரசஇயந்திரத்தை வலுக்கட்டாயத்தின் மூலம் நிர்வகிப்பதற்கு இராணுவ அதிகாரத்தையும் ஆளுமையையும் பயன்படுத்திப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகிறது. சகல தரப்பு மக்களும் சிறிலங்கா அரசு விரித்த வலையில் சிக்காது தம்மையும், தன் இன மக்களையும் பாதுகாப்பதற்கு ஒவ்வொருவரும் முழுமையாகத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

### பாதுகாப்புப் படை அவசியம்

மேலும் அவர் கருத்துவெளியிடுகையில், சிறிலங்கா அரசிடம் கையேந்தும் நிலை மாறுபடவேண்டுமானால் எமது பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்க வேண்டும். கூர்மையடைந்து வரும் எமது விடுதலைப் போராட்டம் தொடர்ந்து வெற்றி பெறும் வரை நடைபெறுவதற்கு சகல வழிகளிலும் நாம் தோள்கொடுக்க வேண்டும். பாரம்பரியமான எமது பிரதேசத்தில் மக்கள் சுபீட்சமாகவும் சுதந்திரமாகவும் வாழ வேண்டுமானால் எம்மைப்பாதுகாப்பதற்கென்று ஒருபடை அவசியமாகின்றது. படையை வளர்ப்பதும் பாதுகாப்பதும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினரையும் சார்ந்தது. போராட்டமும் விடுதலையும் அவசியம் எனக் கருதும் நாம் சிறிலங்கா அரசு எமக்கு விடுகின்ற சவால்களுக்கு முகம் கொடுக்கமுன் வருவதில்லை. அனைத்து சவால்களையும் அனைவரும் ஒன்று திரண்டு முறியடிக்க வேண்டிய கடமைப்பாட்டில் இருக்கின்றோம் என்றார்.

### தலைமையும் அமைப்பும்

தலைமையும் அமைப்பும் விடுதலைப்போராட்டத்துக்கு எதிராக விடப்பட்ட சவால்களை முறியடித்துக் கொண்டிருக்கின்றன. இன்று மக்கள் சவாலைச் சந்திக்கும் அளவிற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். மேலும் தமிழ் ஈழத்தில் நிகழும் ஒரு சிறு நிகழ்வாக இருந்தாலும், அதை விடுதலைப் போராட்டத்துடன் ஒருமித்து உற்று நோக்க வேண்டியுள்ளது. இந்த நடை பெறும்கொலைகளைநியாயப்படுத்தும் வகையில் அரசாங்கம் தன்னுடைய அரச நிர்வாகத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி வருகிறது. நாம் அனைவரும் விழிப்படைவதன் மூலம் எதிரியின் இத் தந்திரோபாயத்தை வெற்றிகரமாக முறியடிப்போம். எமது இனத்தையோ, விடுதலைப் போராட்டத்தையோ மாசுபடுத்துகின்ற செயற்பாடுகளில் நாம் ஈடுபடுவோமேயானால், எதிர்காலத்தில் எமக்கு நாமே அழிவைத் தேடிக் கொள்பவர்கள் ஆவோம். இதைத் தடுக்க வேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் பாரிய பொறுப்பாகும்.

-இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வடதமிழ் ஈழ மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் போராட்டத்தில் முற்று முழுதாக இணைந்திருக்கிறார்கள் என்றும், நிலப்பரப்பை பாதுகாக்கிற அளவில் உறுப்பினர்கள் போதியளவு இணையவில்லை என்றும் வன்னிப் பிராந்திய அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மனோ தெரிவித்தார்.

# எட்டுமாதத்தில் தென்மராட்சியில் 58பேர்பலி; 13பேர் அங்கவீனம்

(செ. நு. மை.)

சிறிலங்கா அரசின் பேரினவாத விமானங்களின் குண்டுவீச்சுத் தாக்குதலால் கடந்த 8மாதங்களில் மட்டும் தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், 57 பேர் பலியாகியுள்ளனர். 13 பேர் அங்கவீனமுற்று அல்லது படுகாயமடைந்துள்ளனர். 230 வீடுகள் சேதமடைந்துள்ளன 37 வியாபாரநிலையங்கள், 06 ஆலயங்கள், 03 பாடசாலைகள் என்பனவும் சேதமடைந்துள்ளன.

இத்தகவல்கள், தென்மராட்சி கோட்ட உதவி அரசாங்க அதிபர் பணிமனை, இப்பகுதிக் கிராமசேவை அலுவலர்கள் மூலமாகத் திரட்டப்பட்டவையாகும்.

## முறைகேடு

(புங்குடுதீவு)

வீட்டில் நின்ற வேலைக்காரப் பெண்ணுடன் பாலியல் வன்முறையில் ஈடுபட்ட (63 வயது) வயோதிபர் ஒருவர் விடுதலைப் புலிகளினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்திலேயே இச் சம்பவம் நிகழ்ந்தது. (22)

# றோட்டறிக் கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ''றோட்டறிக்'' கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி மேற்படி கழகம் போதைவஸ்து, மதுப்பாவனைக்கு எதிரான அறிவியல் கருத்தரங்குகளை யாழ். மாவட்டம் பூராவும் நடாத்திவருகின்றது.

கழகத்தின் தலைவர் திரு. வி. கே. சிவலிங்கம் மேற்படி கருத்தரங்குகளை யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் தோறும் நடாத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இதன் முதற்கட்டமாக கடந்த திங்கட்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் மேற்படி கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவன் செல்வன் எஸ். சசிகாந்தன் கருத்துரை வழங்கினார். இக்கருத்தரங்கிற்கு ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்து வருகின்றது. (௪)

## மலேரியா பரவுகிறது

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி ஆகிய பகுதிகளில் மலேரியாக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது.

வடமராட்சி கிழக்கில் உடுத்துறை, ஆழியவளை, மருதங்கேணி ஆகிய இடங்களிலும், பச்சிலைப்பள்ளியில் மாசார் முகாவில், சோரன்பற்று ஆகிய இடங்களிலும் அனேகர் இந்நோய்க்கு ஆளாகியுள்ளார்கள்.

அதேவேளை, இப்பகுதி மக்கள் சிகிச்சைக்குச் செல்லும் மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில் எல்லா வகை மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. (36)

# வகுப்புக் கலவரத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை தவிர்க்கவும்

## அரசியல் கட்சிகளிடம் தேர்தல் கமிஷன் கோரிக்கை

(டில்லி)

இந்தியாவில் தேர்தலை யொட்டி வகுப்புக்கலவரங்களை ஏற்படுத்தும் எந்த நடவடிக்கைகளையும் தவிர்க்குமாறு அரசியல் கட்சிகள் அனைத்தையும் தேர்தல் கமிஷன் கேட்டுள்ளதோடு, இதுபற்றி நடத்தைநெறியும் வகுத்துள்ளது.

இதன்படி அரசியல் கட்சிகள் தேர்தல் பிரசாரத்திற்கு தங்களது அதிகார அமைப்புக்களை தவறாக பயன்படுத்தக்கூடாது என்றும் கட்சிகள் கடந்தகால நடவடிக்கைகள், கொள்கைகள், திட்டங்கள், சாதனைகள் பற்றி மட்டுமே விமர்சிக்க முடியும் என்றும் வாக்குகளைப் பெறுவதற்காக ஜாதி உயர்வுகளையோ, வகுப்பு வாதத்தையோ தூண்டிவிடும் எந்தவகைப் பேச்சும் பேசக்கூடாது என்றும் இந்த நடத்தை நெறியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை கண்டிப்பாக கடைப்பிடிப்பதற்காக தேர்தல் கமிஷன் முனைப்புடன் இறங்கியுள்ளது.

# லோக்சபாத் தேர்தலுடன் தமிழக சட்டசபைத் தேர்தல்

(டில்லி)

தமிழக சட்டசபைத் தேர்தல் மே மாதத்தில் நடைபெறவுள்ள லோக்சபாத் தேர்தலுடன் நடைபெறுமென இந்தியத் தலைமைத் தேர்தல் அதிகாரி டி.என்.சேசன் நேற்று டில்லியில் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் 234 தமிழக சட்டசபைத் தொகுதிக்கான தேர்தலை லோக்சபாத் தேர்தலுடன் நடாத்துமாறு மத்திய அரசாங்கம் தேர்தல் கமிஷனுக்கு தகவல் அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறும் ஏனைய மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல் நடாத்துவது பற்றி எதுவித தகவலும் தேர்தல் கமிஷனுக்கு அனுப்பப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# பங்களாதேஷின் பிரதமராக பேகம் ஹலிசியா பதவி ஏற்பு

(டாக்கா)

1971 இல் பங்களாதேஷ் உருவானதின்பின் முதல்பெண் பிரதம மந்திரியாக பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியின் தலைவி பேகம்ஹலிசியா நேற்றுப் பிற்பகல் பதவியேற்றுள்ளார்.

தற்காலிக அதிபரான நீதிபதி சகாவுதி அகமட் முப்பதொரு அமைச்சரவை உறுப்பினர்களுக்கும் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத்திற்கான தேர்தலில் பேகம் ஹலிசியாவின் கட்சிக்கு 131 இடங்கள் கிடைத்தன. ஆனால் அறுதிப் பெரும்பான்மை வலு அவருக்குக் கிடைக்கவில்லை. 18 இடங்களுடன் ஜமாத்திய இஸ்லாமிய கட்சி நிபந்தனையற்ற ஆதரவை அளிக்கவுள்ளது.

### தீவுப்பகுதி மக்களுக்கு உணவுப்பொருள்

# நிர்ணயிக்கப்பட்ட விலையில் விநியோகிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி மக்களுக்கான உலர் உணவுப்பொருள்கள் நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலேயே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிவாரணப் பொருள் விநியோகத்தின் போதுபோக்குவரத்து செலவுகளைக் காரணம் காட்டி பொருள்களுக்கு அதிகளவு பண மதிப்பீடு செய்யப்பட்டு விநியோகித்ததை பொது மக்கள் பலர் தெரிவித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி முதல் நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலேயே நிவாரண நடவடிக்கைகளை மேற் கொள்வது என்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அறிவித்துள்ளன. மேற்படி நடைமுறையை பின்பற்றத் தவறும் கூட்டுறவுச் சங்கங்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# குவைத் அமைச்சரவை இராஜினாமா

(குவைத்)

குவைத்திய அமைச்சரவை நேற்று இராஜினாமா செய்துள்ளது. ஈராக்கிய துருப்புக்கள் வெளியேறிய பின்னர் குடிநீர், மற்றும் மின்சார சப்ளைகளை ஏற்படுத்த அரசாங்கம் தவறிவிட்டதாக எழுந்த புகார்களையடுத்தே அமைச்சரவை ராஜினாமா செய்தது.

# அம்னஸ்டி இன்டர்நெஷனல் இலங்கை வர அனுமதி

(கொழும்பு)

லண்டனில் நிலைகொண்டு செயற்படும் மனித உரிமை காப்பு அமைப்புகளில் ஒன்றான "அம்னஸ்டி இன்டர்நெஷனல்" எனப்படும் அனைத்துலக அமைய ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வர சிறிலங்கா அரசு அனுமதி அளித்துள்ளது. 1982 ஆம் ஆண்டில் இருந்து "அம்னஸ்டி இன்டர்நெஷனல்" இலங்கைக்கு வருவது தடுக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் அண்மையில் தொழிற்சங்க மாநாடொன்றில் கலந்துகொள்ள வந்திருந்த "அம்னஸ்டி இன்டர்நெஷனல்" உறுப்பினர்கள் இருவர் அரசின் மூத்த உறுப்பினர் பலரையும் சந்தித்துப் பேசியதாகவும், அதிகாரபூர்வமான ஆய்வுக்குழு இலங்கைக்கு வரும் ஏதுநிலை பற்றி ஆராய்ந்ததாகவும் தெரிகின்றது. 'அம்னஸ்டி இன்டர் நெஷனல்' லின் இந்த வேண்டுகோளை ஆக்கபூர்வமாகப் பரிசீலிக்கச் சிறிலங்கா அரசு தீர்மானித்திருப்பதாகச் சர்வதேச விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் லீக் கூட்டு

(சென்னை)

சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் தேர்தல் கூட்டு வைத்துக்கொள்வதென அப்துல் சமத் முஸ்லிம் லீக் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

# போக்குவரத்துச்சபை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச போக்குவரத்துச்சபை ஊழியர்களின் தென்பகுதி இடமாற்றம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் சாலையில் நடைபெறவுள்ளதால் இதில் அனைத்து சாலைகளைச் சேர்ந்த சகலதர ஊழியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழ்பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

# யாழ்.இந்து பிரச்சினைக்கு நேற்று சமரசத் தீர்வு

(நல்லூர்)

வகுப்புகளைப் பகிஷ்கரித்து வந்த யாழ். இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் கல்லூரி நிர்வாகத்துக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் சமரசம் ஏற்பட்டது. நலன் விரும்பிகள் தலையிட்டு இரு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்தே மாணவர் பகிஷ்கரிப்பைக் கைவிட இணக்கம் தெரிவித்தனர்.

இதே வேளை, உயர்தர வகுப்பு மாணவர் ஒன்றியத் தலைவர் சர்மா உட்பட பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்கள் மீளவும் வகுப்புகளில் அனுமதிக்கப் படுவார்களென்றும், மாணவர் உள்ளகக் கழகங்கள் வழமைபோல் தொடர்ந்தும் இயங்கும் என்றும், மாணவர்களுக்கும் நிர்வாகத்துக்கும் இடையில் ஏற்படும் பிரச்சினைகளைப்பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம் என்றும் கல்லூரியில் நேற்றுப் பிற்பகல் நடந்த கூட்டம் ஒன்றில் அறிவிக்கப்பட்டது.

மாணவர் தரப்பில் ஒன்றியத் தலைவர் சர்மா உரை நிகழ்த்தினார். கல்லூரி அதிபர், பிரதி அதிபர் உட்படச் சில ஆசிரியர்களும் கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தனர்.

கல்லூரி ஒரு குடும்பம் போன்றது என்றும், கல்லூரியில் ஆசிரியர்களும், மாணவர்களும் ஒற்றுமையாக வாழ்வது பயன்பொருத்தமானது என்றும் நலன்விரும்பிகள் வலியுறுத்தினார்கள்.

# கடமைக்கு வராதோர் பதவி இழப்பர்

(வவுனியா)

வவுனியா தெற்கு சிங்களம், வவுனியா தெற்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் வழமையான நிலைக்குதிரும்பி அமைதி நிலவுவதாகவும் எனவே இப்பிரிவுகளில் கடமையாற்றும் சகல அரசதரப்பு ஊழியர்களும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்கும் முன்னர் வேலைக்கு வரும்படி அரசாங்கம் பணித்துள்ளது.

சேவை நிலையங்களுக்கு வருகை தராத அனைத்து ஊழியர்களும் சேவையில் இருந்து விலக்கிக் கொள்ளப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# வைத்தீஸ்வராக் கல்லூரியில் நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர்களான சாம்சன், (செல்வநாயகம் செல்வசந்திரன்) இளம்புலி சாம்சன் (செல்லப்பா குலேந்திரன்) மற்றும் ஏனைய சக போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வைத்தீஸ்வராப் பிரதான மண்டபத்தில் நினைவஞ்சலிக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

இதில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் சிறப்புரை யாற்றவுள்ளார். அத்துடன் "போரிக்கால இன்னிசைக்கானங்கள்" இசை நிகழ்ச்சியும், "களத்தில் காத்தான்" இந்து நாடகக்கூத்தும் இடம்பெறவுள்ளன. (மு)

# சினைப்பர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வலலாய் அன்ரனி குடியேற்றத்திட்டத்தில் காவலரண் அமைத்து நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் சினைப்பர் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் படையினர் தரப்பில் ஏற்பட்ட சேதம் பற்றி தெரியவில்லை.

## வியாபாரயிடம் புளொட் கப்பம்

(செ. த. மை)

தொண்டமனாறு – செருடாவிலிருந்து, வவுனியாவுக்கு வெங்காயம் விற்பனை செய்யச் சென்ற ஒருவர், புளொட்டினால் கடும் தாக்குதலுக்குள்ளானதுடன் 2,300 ரூபா வரிப்பணமும் கொடுக்க நேர்ந்ததாம்.

கடந்த 12 ஆம் திகதி கு. சந்திரன் என்பவர் 23 மூடை வெங்காயத்துடன் லாண்மாஸ்டரில் வவுனியா சென்றிருந்தார். இவர் 16 ஆம் திகதி வவுனியா நகரச்சந்தையில் வெங்காயத்தை விற்றுவிட்டு பணத்தை வசூல் செய்து கொண்டிருந்த பொழுது அங்கு வந்த புளொட் உறுப்பினர்கள் இவரைக் கடுமையாகத் தாக்கி விட்டு 2,300 ரூபாவை வரிப்பணமாக வாங்கிக் கொண்டார்களாம்.

பரீட்சை

அனுமதி அட்டையுடன் பொறுப்பாசிரியர்களை அனுப்பிப் பரீட்சை சமூகமாக நடக்க ஏற்ற ஒழுங்குகளை செய்யுமாறும், இடம் மாறிய புதிய பரீட்சை நிலைய விபரங்களை அதிபர்கள் கோட்டக்கல்வி அலுவலகங்களில் இருந்து பெற்றுக்கொள்ளுமாறும் இப்பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் முப்பதாம் திகதி சனிக்கிழமை நடைபெறும் எனவும் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (மு)

மரணச்சடங்கு

மாக வழங்கப் பட்ட மரண அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியுடன் செயலக புனர்வாழ்வுப் பகுதியுடன் ஏப்பிரல் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (லோ)

இரு ராணுவ

ணுவத்தினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதே வேளை தொடர்ந்தும் மூகாமைத் தாக்கிவரும் புலிகள் இராணுவத்தினரின் பல நிலையங்களைக் கைப்பற்றியுள்ளதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

ஓ பிரிவு

படி போதனா வைத்திய சாலையில் இரத்தவங்கி அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர். (க)

ஷெல்

குதல்கள் நடாத்தப்பட்டது. காலை 10-30 முதல் 11-15 மணிவரை இடம் பெற்ற இத்தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை.

சிறிலங்கா

சென்றிருக்கலாம் என்று கருதப்படுகின்றபோதும் மேலதிக விபரம் எதுவும் தெரியவில்லை.

இவர்களில் 35 ஆண்களும், 5 பெண்களும், மூன்று குழந்தைகளும் அடங்குவர். இவர்கள் வளப்பாட்டில் "லில்லி" கப்பலில் வேலைசெய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மன்னார் ஆயர்

பாஸ்கா மெழுகுதிரிகளை ஆயர் கரங்களில் தன்வசம் வைத்திருந்தார். மெழுகுதிரியை அவதானித்த இராணுவத்தினர் மெழுகுதிரியை தூக்கி எறிந்துவிட்டு ஆயரைத் தாக்கியுள்ளனர்.

ஆயர் தாக்கப்படுவதை அவதானித்த லொறியொன்றில் பிரயாணம் செய்த வணக்கத்துக்குரிய சுவாமி ஒருவர் உங்களால் நையப்புடைக்கப்படுபவர் மன்னார் ஆயர் என்று அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த சிறிலங்காப் பொலிஸாரிடம் கூறியுள்ளார். ஆயரைத் தாக்கியவர் இராணுவப் பொலிஸ் பெரியவர். எம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று கடமையில் ஈடுபட்டிருந்த சிறிலங்காப் பொலிஸாரிடமிருந்து பதில் வந்தது. தொடர்ந்தாற் போல் மன்னார் ஆயர் சௌந்தரநாயகமும், அவரது கார்ச்சாரதியும் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

யாழ்- வைத்தியசாலை

மாக வெளிக்காட்டப் பட்டிருப்பதாலும் பெண் இனப்பெருக்கத் தொகுதி சிறப்பாக விருத்தியடைந்திருப்பதாலும் இவருக்கு கருத்தரித்து பிரசவம் நிகழ்ந்திருப்பது அறிவியல் ரீதியாக நோக்குமிடத்து அதிகதூரம் வியப்புக்குரிய சம்பவம் அல்ல என்று மேற்படி பிரசவத்தில் கடமையாற்றிய மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேற்படி பிரசவத்தின் போது சுமார் 2 கிலோக்கிராமிற்குமேற்பட்ட நிறையுடைய ஆண் குழந்தை ஒன்று இறந்த நிலையில் பெறப்பட்டது. மேலும் இவரின் உடலில் காணப்பட்ட ஆண், பெண் ஆகியவர்களுக்குரிய ஓமோன் சமநிலையில் ஏற்பட்ட மாற்றம் இக்குழந்தையை மரணமடையச் செய்திருக்கின்றது என்றும் முன்கூட்டியே ஓமோன் சமநிலையைப் பேணுவதற்குரிய விசேட சிகிச்சைகளை மேற்கொண்டிருந்தால் இக்குழந்தையை உயிர்தப்பவைத்திருக்க முடியும் என்று தாய் சேய் நலன்களுக்குப் பொறுப்பான மற்றுமொரு வைத்திய அதிகாரி தெரிவித்தார். (க) (லோ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.